# தலைவா உமக்கு இறப்பில்லை!

தமிழ் மகள் சீராட்டில்
சிறப்புற்ற தலைவா,
தரைமகள் தாலாட்டில்
உறங்குகின்ற தலைவா,
நீரின்றி வாடும் நிலம் போல,
நீயின்றி தவிக்குது அரசியல் களம்;

அகில இந்திய அரசியலில்,
ஜனநாயக செயல்பாட்டில்,
குறை செய்வோரைக் கண்டித்து,
நிறை செய்வோருடன் தோள் கொடுத்து
தோழமை பாராட்டிய
அரசியல் கதாநாயகனே;

அண்ணாவின் பின்னால்
தொண்டர் படையுடன்,
கொள்கைப் பிரச்சாரப்
படையும் வைத்திருந்தோம்;

மக்கள் நலப்பணி
பலப்பல செய்திட்டதால்,
தேர்தல் பிரச்சாரக் களப்பணியில்
தொய்வு கொண்டுவிட்டோம்;

தலைவா,
உன் வசனம் படித்து,
நடித்தவர் வென்றார்,
நாட்டை ஆண்டார்,
பதவியில் நடிக்கவில்லை;

மேடையில் படித்து,
மக்களிடம் நடித்து,
தேர்தலில் வென்றார்,
பதவியில் நடிக்கின்றார்,
நடிப்பு ஓயவில்லை;

பகுத்தறிவுப் பாசறையில்
பயின்று வளர்ந்த எம்தலைவா,
முற்போக்குச் சிந்தனை கொண்ட
உம் அறிவுத் திறத்தாலே
இளைய தலைமுறையை நீ
படைத்தாய்;

நுண்ணறிவுத் திறம் பெற்று
நம் தலைமுறை வளர்ந்திடவே
“செயற்கை நுண்ணறிவு”
தொழில் நுட்பத்துறை
நீ வளர்த்தாய்,
நுண்ணறிவால் உலகை ஆள
திட்டத்தினை நீ வகுத்தாய்;

திரைக் கவர்ச்சி மூலதனத்தில்
நிழல் உலகில் வளர்ந்தவர்கள்
நிஜத்தை மறைத்து
பொய்மையைப் பரப்பினர்;

உன் திட்டத்தால் பயனடைந்தோர்,
பொய்களை நம்பி
வழிதவறினர்;

நிஜத்தை உணர்ந்து
ஏற்ற தலைமுறை,
நிழலை நம்பி ஏமாறுகிறது;
நிஜத்தை உணர்த்திய தலைவர்கள்
ஆண்டது உனது காலம்;
நிழலைக்காட்டி மயக்கும் தலைவர்,
ஆள்வது இந்தக் காலம்;

தமிழகமே உன்னுள்
பற்பல கட்சிகள்
பிறந்திருந்தாலும்,
அவைகளின் பாதைகள்
வேறாக இருந்தாலும்,



விழிப்புணர்வு ஒன்றே ஆணிவேராய்
தெளிவான அரசியல்
நீ கற்றிருந்தாய்;

“நீட்டால்” உயிர் நீத்தார்
குடும்பத்தார் வயிறு போல,
நாடே பற்றி எரியும்
இளைஞர்கள் போராட்டத்தினூடே,

ஆளும் அமைச்சகமும்,
அதிகாரிகளும்,
திரைப்படம் பார்த்து,
பொழுது போக்கிய,
போக்கத்த அரசியல்
இன்றைய நிலை;
“Rome burned while
Nero fiddled” என்ற
கடமையை புறக்கணிக்கும்
தலைவரைக் குறிக்கும்,
வரலாற்று உவமை
இன்று
அரசியல் உண்மையானது;

பகுத்தறிவு, சுயமரியாதை,
கொள்கை என்றிருந்த
அரசியல் களம் இன்று
“மனமகிழ் மன்றம்” ஆனது;
உன்னை இழந்தபின்
சமூக அரசியல்
கண்ணை இழந்தது;

ஆலமரத்தின் விழுதுகள்
வேர்களாய் மாறி
கிளைகளை உயர்த்தித் தாங்கும்,
அதில் பலவகை பறவைகள் வாழும்,
தமிழ்நாடு நிமிர்ந்திட
உம்தலைமுறை உழைப்பினை
தமிழ்நாடு வரலாறு பேசும்,
காலம் உம் பெயர் சொல்லும்,

தமிழ் அன்னைக்கு முதுமை இல்லை,
தலைவா உமக்கு இறப்பு இல்லை,
உறக்கம் கொள்கின்றாய்,
நீ எம் மனதில் சிறப்பாக வாழ்கின்றாய்.



எம்.ஜாகீர் உசேன்



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் சிறப்புரையாற்றி, ஆகஸ்ட் 7–ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் முன்னிட்டு மாவட்டம் முழுவதும் அனுசரிக்க வேண்டும் என வலியுறுத்தினார். கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.மூர்த்தி, மாநில மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன், வெ.அன்பு வாணன், கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், மு.கதிரவன், கே.வி.ஜி. உமாமகேஸ்வரி வேணு, கே.சுப்பிர மணி, பா.செ.குணசேகரன், பி. வெங்கடாசலபதி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மின்னணு உற்பத்தி குறித்து பெருமையாகக் குறிப்பிடும் ஒன்றிய அரசு

# தமிழ்நாட்டின் உயர் மதிப்பு உற்பத்தி குறித்து தெளிவான உறுதி இல்லை!

## மக்களவையில் – ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.6-

மின்னணு உற்பத்தி வளர்ச்சி குறித்து பெருமை பேசும் ஒன்றிய அரசு; தமிழ்நாட்டின் உயர் மதிப்பு உற்பத்தி இலக்குகளுக்கு தெளிவான உறுதி இல்லை என மக்களவையில்ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ், புதிய மொபைல் போன் உற்பத்தித் திட்டத்தின் கீழ் உள்நாட்டு மதிப்புக் கூட்டல், வடிவமைப்புத் திறன் மற்றும் மேம்பட்ட மின்னணு கூறுகள் உற்பத்தியை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்று கேட்டார். மேலும், ஆராய்ச்சி, புதுமை மற்றும் மின்னணு கூறுகள் உற்பத்திக்காக வழங்கப்படும் ஊக்கத்தொகைகள் மற்றும் நிதி ஆதரவின் விவரங்கள், ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூர் உள்ளிட்ட தமிழ்நாட்டின் உற்பத்தி மையங்களின் திறன் உயர் மதிப்பு மின்னணு உற்பத்தி மற்றும் உலகளாவிய மதிப்புச் சங்கிலியில் இணைவதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும், உள்நாட்டு மின்னணு உற்பத்தித் திறன் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேலும் வலுப்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதையும் விளக்கம் கோரினார்.



அதற்கு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் பதில் வருமாறு

(அ) முதல் (ஈ) வரை: மேக் இன் இந்தியா மற்றும் ஆத்மநிர்பர் பாரத் என்ற பிரதமரின் நோக்கத்தை முன்னிறுத்தி, இந்தியாவில் முழுமையான மின்னணு உற்பத்தி சூழலை உருவாக்க ஒன்றிய அரசு பல்வேறு கொள்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

முதலில் இறுதிப் பொருட்கள், பின்னர் துணைக் கூறுகள், அதன் பின் மின்னணு கூறுகள், இறுதியில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் என கட்டமைக்கப்பட்ட முறையில் இந்தியாவின் மின்னணு உற்பத்தித் துறையை வளர்க்கும் உத்தி பின்பற்றப்பட்டதாகவும், அதற்குத் தேவையான உள்கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக இந்தியா உலகளாவிய மின்னணு உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாகவும், கடந்த 12 ஆண்டுகளில் மின்னணு உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

2014-15 - 2025-26 ஆகிய ஆண்டில் விபரம் வளர்ச்சி

மின்னணு பொருட்கள் உற்பத்தி - சுமார் 1.9 லட்சம் கோடி - சுமார் 13.11 லட்சம் கோடி - 7 மடங்கு

மின்னணு பொருட்கள் ஏற்றுமதி - சுமார் 38 ஆயிரம் கோடி - சுமார் 34.24 லட்சம் கோடி - 11 மடங்கு

மொனபல் போன் உற்பத்தி - சுமார் 18 ஆயிரம் கோடி - சுமார் 6 27 லட்சம் கோடி - 33 மடங்கு

மொபைல் போன் ஏற்றுமதி - சுமார் 1,500 கோடி - சுமார் 22.59 லட்சம் கோடி - 165 மடங்கு

இந்த வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு கடந்த 12 ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும், அவற்றில் பெரிய அளவிலான PLI LLD, IT Hardware PLI 2.0, Electronics Component Manufacturing Scheme (ECMS), Semicon India Programme, EMC 2.0, SPECS, செமிகண்டக்டர் மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி மேம்பாட்டு திட்டம், Make in India கொள்முதல் முன்னுரிமை மற்றும் 100% அந்நிய நேரடி முதலீட்டுக்கு அனுமதி ஆகியவை அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் போன் உற்பத்திதான் இந்தியாவின் மின்னணு உற்பத்தி வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்ததாகவும், 2025-26 ஆம் ஆண்டில் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய மொபைல் போன் உற்பத்தியாளராகவும், இறக்குமதி செய்யும் நாட்டிலிருந்து நிகர ஏற்றுமதி நாடாகவும் மாறியுள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

15.07.2026 அன்று 62,500 கோடி நிதி ஒதுக்கீட்டில் மொபைல் போன் உற்பத்தித் திட்டம் (MPMS) ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் பெற்றுள்ளதாகவும், உள்நாட்டு மதிப்புக் கூட்டல், முக்கிய கூறுகளின் உள்நாட்டு கொள்முதல், இந்திய வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கு கூடுதல் ஊக்கத் தொகைகள் வழங்குவது இதன் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முக்கிய மின்னணு கூறுகள் மற்றும் துணைக் கூறுகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் Electronics Component Manufacturing Scheme (ECMS) ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மின்னணு உற்பத்தி

மாவட்டம் - உற்பத்தி அலகுகள் எண்ணிக்கை விபரம் வருமாறு:

செங்கல்பட்டு - 4, சென்னை - 6, கோயம்புத்தூர் - 1, காஞ்சிபுரம் - 38, கிருஷ்ணகிரி - 8, தூத்துக்குடி - 2, திருநெல்வேலி - 1, திருவள்ளூர் - 6, வேலூர் - 1

இந்த அலகுகளில் மொபைல் போன்கள், IT Hardware வாகன மின்னணு சாதனங்கள், நுகர்வோர் மின்னணு சாதனங்கள். Printed Circuit Boards (PCB), Display Modules, Enclosures, Transducers, LED, Chargers Connectors ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

EMC 2.0 திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் காஞ்சிபுரம்மற்றும்திருவள்ளூரில் இரண்டு Greenfield Electronics Manufacturing Clusters ஒப்புதல் பெற்றுள்ளன. இத்திட்டங்களின் மொத்த மதிப்பு 1,012.02 கோடி: 853.6 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய இத்திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் நிதி உதவியாக 506 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு கே.இ.பிரகாஷ் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

# நிலக்கரி விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும்!

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கோரிக்கை

புதுடெல்லி, ஆக.6-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 3 ஆகஸ்ட் 2026 அன்று மாநிலங்களவையில் அதிகரித்து வரும் நிலக்கரியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்தவும், எரிசக்தி பாதுகாப்பினை உறுதி செய்யவும், முறையான வர்த்தக முறைகளை பின்பற்றிடவும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் உதவி செய்யுமா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும், நிலக்கரி விதிகள் 2026 முறையாக செயல்படுத்தப்படுமா? என்றும், ஒன்றிய அரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணையமைச்சர் சதீஷ் சந்திர துபே அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றியஅரசின் நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்தபதில் பின் வருமாறு:

சுரங்கங்கள் மற்றும் தனிமங்கள் மேம்பாட்டு சட்டம் 1957ன்படி, நிலக்கரி கட்டுப்பாட்டு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த ஆணையத்தின் ஆணைப்படி கடந்த ஜூன் மாதம் முதலாகவே கணிணி வழியாக நிலக்கரி விற்பவர்கள், வாங்குபவர்களின் விண்ணப்பங்கள் முறையாக பரிசீலிக்கப்பட்டு வர்த்தகத்தை பெருக்க தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது என்றும், நிலக்கரி ஒப்பந்தங்களை ஏற்படுத்தல், நியாமான விலைப்பட்டியலை தயாரித்தல், சரியான நேரத்தில் நிலக்கரி கிடைக்கச் செய்தல், சந்தை நிலைமையை சீராக வைத்தல் எனப் பல்வேறு முக்கிய பணிகளை ஆணையம் கண்காணித்து வருகிறது என்றும், இதற்கான விதிமுறைகளை ஒழுங்காக பின்பற்றப்படுவதை ஆணையம் கவனித்து வருகிறது என்றும், இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.



மேலும், நிலக்கரியின் தரத்திற்கு தகுந்த விலை கிடைக்கவும், நிலக்கரி வர்த்தகம் சீராக நடைபெறவும் ஆணையம் உதவி செய்கிறது என்றும், வசதிகள் மீறப்படும் போது தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளவும், சந்தையில் சீரான நிலைமை உருவாக்கவும் நிலக்கரி ஆணையத்தின் செயல் பாடுகள் உதவியாக உள்ளது என்றும், இதன் மூலம் தரத்திற்கு எற்ற நிலக்கரியின் விலையும் உறுதி செய்யப்படுகிறது என்றும். இம்முயற்சிகளால் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு உறுதி செய்யப் படுகிறது என்று ஒன்றிய அரசின் மாண்புமிகு நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை இணையமைச்சர் திரு சதீஷ் சந்திர துபே அவர்கள் மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 8வது நினைவு நாளினையொட்டி – ஆக.7 அன்று

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

## தொண்டர் அணித் தோழர்களுக்கு அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

கழக தொண்டரணிச் செயலாளர் பெ.சேகர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து,

அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று பல பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளான ஆகஸ்ட்-7, வெள்ளிக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள ‘அமைதிப் பேரணி’யில் சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னைதெற்கு - சென்னை கிழக்கு - சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - காஞ்சிபுரம் வடக்கு - காஞ்சிபுரம் தெற்கு - திருவள்ளூர் வடக்கு - திருவள்ளூர் தெற்கு - திருவள்ளூர் மத்திய ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் அணியினர் ஆகஸ்ட்-7 அன்று காலை 7.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் கருப்பு-சிவப்பு சீருடை அணிந்து தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப்படத்திற்கு மரியாதை!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக. 6-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வருகின்ற 07.08.2026 வெள்ளிக்கிழமை மறைந்தும் மறையாமலும் நம் நெஞ்சங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளை முன்னிட்டு, குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளில் அடங்கிய கிளை கழகங்களில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் அன்று காலை மணியளவில் படப்பை பஜார் வீதியிலிருந்து புறப்பட்டுச் சென்று ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்றிட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.